நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J.உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 29 ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை
C.N.R.No.TNMY02-000100-2020

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 161/2020**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
மயிலாடுதுறை காவல் நிலையம்,
குற்ற எண். 266/2019 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1) கீர்த்திகரன், 20/2019
த/பெ. முனுசாமி,
மாரியம்மன் கோவில் தெரு,
தர்மபுரம், மயிலாடுதுறை.

2) சசிகுமார், 19/2019
த/பெ. உமாபதி,
கொத்த தெரு,
மெயின்ரோடு, கீழநாஞ்சில்நாடு,
மயிலாடுதுறை. ..... எதிரிகள்

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட**
**R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**
**மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**
**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | A1, A2 - 13.07.2019 | - | A1, A2 - 15.07.2019 |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 13.07.2019 | 11.09.2020 | |
| iii) | The date of questioning of the Accused U/s.263 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 | 02.12.2022 | | |

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:12:30 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| iv | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS. | Crlmp No. | Date of filing | Result |
| | | U/s.359(ii)of BNSS Crlmp No.396/26 | 27.02.2026 | Dismissed |
| | | - | - | - |
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 27.02.2026 | 27.02.2026 |
| | | PW2 | 27.02.2026 | 27.02.2026 |
| | | PW3 | 27.02.2026 | 27.02.2026 |
| | | PW4 | 06.03.2026 | 06.03.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351(1)(b) BNSS. | 09.03.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 115.09.2020ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 09.03.2026ஆம் தேதி நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி P. மாலதி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சந்தோஷ்குமார் அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

(i) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 12.07.2019ம் தேதியன்று மாலை சுமார் 04.30 மணியளவில் சாட்சி–1 பரத்ராஜ் அவரது நண்பர் சுந்தர் ஆகிய இருவரும் மயிலாடுதுறை டூ மன்னம்பந்தல் மெயின்ரோட்டில் (கீழ நாஞ்சில் நாடு) பாலாஜி திருமண மண்டபம் எதிரே பஸ் ஸ்டாப் அருகே பஸ் ஏற நின்று கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகள் இருவரும் வாதி மற்றும் சுந்தர் இருவரையும் பார்த்து இங்கே ஏன்டா நிக்கிறீங்க புண்டா மகனே என்று சொல்லி திட்டியதாகவும் அதற்கு மேற்படி சாட்சிகள் இருவரும் தாங்கள் கல்லூரி முடித்து வீட்டிற்கு போக பஸ் ஏற நிற்கிறோம் என்று சொல்ல எதிரிகள் இருவரும் என்னடா எதிர்த்து பேசுற என்று சொல்லி 1வது எதிரி கீழே கிடந்த இரும்பு பைப்பை எடுத்து வாதியின் வலது கை தோள்பட்டை, இடது கால் தொடையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து சுந்தரை பார்த்து நீ

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:12:37 +0530

என்னடா அவனுக்கு சப்போர்ட்டா என்று சொல்லி சுந்தரின் வலது முன் கையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் தங்கள் கையில் வைத்திருந்த இரும்பு பைப் மற்றும் கருங்கல்லை காட்டி இதை போலிசில் சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSSன் படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர், 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>(ii) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

5) கடந்த 12.07.2019ம் தேதியன்று மாலை சுமார் 04.30 மணியளவில் அ.சா.1 பரத்ராஜ் அவரது நண்பர் ப.சா.2 சுந்தர் ஆகிய இருவரும் மயிலாடுதுறை டூ மன்னம்பந்தல் மெயின்ரோட்டில் (கீழ நாஞ்சில் நாடு) பாலாஜி திருமண மண்டபம் எதிரே பஸ் ஸ்டாப் அருகே பஸ் ஏற நின்று கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகள் இருவரும் அ.சா.1 மற்றும் ப.சா.2 சுந்தர் இருவரையும் பார்த்து இங்கே ஏன்டா நிக்கிறீங்க புண்டா மகனே என்று சொல்லி திட்டியதாகவும் அதற்கு மேற்படி இருவரும் தாங்கள் கல்லூரி முடித்து வீட்டிற்கு போக பஸ் ஏற நிற்கிறோம் என்று சொல்ல எதிரிகள் இருவரும் என்னடா எதிர்த்து பேசுற என்று சொல்லி 1வது எதிரி கீழே கிடந்த இரும்பு பைப்பை எடுத்து அ.சா.1ன் வலது கை தோள்பட்டை, இடது கால் தொடையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து ப.சா.2ஐ பார்த்து நீ என்னடா அவனுக்கு சப்போர்ட்டா என்று சொல்லி ப.சா.2ன் வலது முன் கையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் தங்கள் கையில்

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:12:43 +0530

வைத்திருந்த இரும்பு பைப் மற்றும் கருங்கல்லை காட்டி இதை போலிசில் சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக 1, 2 எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) கடந்த 13.07.2019ம் தேதி காலை 09.00 மணிக்கு அ.சா.4 திரு. மகாதேவன் உதவி ஆய்வாளர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது வாதி பரத்ராஜ் என்பவர் இவ்வழக்கில் காயம்பட்ட சுந்தர் என்பவருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனு **அ.சா.ஆ.2** பெற்று, மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண்.266/2019, ச/பி. 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** பதிவு செய்து, பின்னர் சம்பவ இடத்திற்கு 09.30 மணிக்கு சென்றும் சாட்சிகள் அஜய், மகேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் பரத்ராஜ், சுந்தர், அன்புமணி, அஜய், மகேஷ்குமார், லெட்சுமணன், ராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் அன்றையதினம் 12.00 மணிக்கு தருமபுரம் ஆர்ச் அருகே உள்ள பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்த 1, 2 எதிரிகளை 2.05 மணிக்கு கைது செய்து கைது செய்த விபரத்தை உறவினர்களுக்கு தெரிவித்தும், 1வது எதிரி 12.10 மணிக்கு தானாக சாட்சிகள் மாரியப்பன், சுதன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.6** பதிவு செய்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி பயன்படுத்திய இரும்பு பைப்பை தன் வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், 2வது எதிரி பயன்படுத்திய கருங்கல்லை அங்கேயே சம்பவ இடத்தில் தூர தூக்கி எறிந்துவிட்டதாகவும் கூறினார் என்றும், அதன்படி 13.00 மணிக்கு 1வது எதிரி தன் வீட்டில் மறைத்து வைத்திருந்த பழைய இரும்பு பைப் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.7**ஆக கைப்பற்றி, படிவம் 91 **அ.சா.ஆ.8**ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து, (இரும்பு பைப் அ.சா.பொ.1) அதே இடத்தில் சாட்சிகள் மாரியப்பன், சுதன்ராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பிறகு இரண்டு எதிரிகள் மற்றும் மகசரில் உள்ள தடயபொருள் 13.45 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்து, பின்னர் 18.07.2019ம் தேதி வாதி பரத்ராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்து சான்று வழங்கிய மருத்துவர் வினோத்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.9** பெற்று, 18.07.2019ம் தேதி வழக்கின் ப.சா.2 சுந்தர் என்பவருக்கு சிகிச்சை அளித்து சான்று வழங்கிய மயிலாடுதுறை மருத்துவர் அபிநயா என்பவரை விசாரித்து வாக்குமூலம் மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.10** பெற்று, பின்னர் விசாரணை முடித்து 24.07.2019ம் தேதியன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:12:49 +0530

7) புகார்தாரர் அ.சா.1 திரு. பரத்ராஜ், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 திரு. அன்புமணி மற்றும் கேள்விநிலை சாட்சியான அ.சா.3 திரு. ராஜா ஆகியோர் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 திரு. மகாதேவன் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

8) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 06.03.2026அன்று முடித்து கொள்ளப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 12 குறிப்பிடப்பட்டு வழக்கின் தன்மை கருதி பட்டியல் சாட்சிகள் 2, 4, 5, 7 முதல் 11 வரையிலானவர்கள் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்கள்.

9) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் 09.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

10) அரசு தரப்பானது புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் கேள்விநிலை சாட்சியான அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபோதிலும், அ.சா.4 சாட்சியின் மூலமாக புலன் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும், புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரிகள் செய்த குற்றத்தை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

11) மாறாக எதிரிகள் தரப்போ, இவ்வழக்கின் புகார்தாரர், கண்ணுற்ற சாட்சி மற்றும் கேள்விநிலை சாட்சி ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதால், அரசு தரப்பு எதிரிகளின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

<u>(iii) தீர்வுக்குரிய பிரச்சனை</u>

12) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான ச/பி. 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:12:55 +0530

**<u>iv) தீர்வு:</u>**

13) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 12.07.2019ந் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு மயிலாடுதுறை டூ மன்னம்பந்தல் மெயின்ரோட்டில் கீழநாஞ்சில் நாடு பஸ் ஸ்டாப் அருகில் அமைந்துள்ளது. அமைந்துள்ளது. பின்னர் அ.சா.1னிடம் புகார் மனு பெற்று, 13.07.2019ம் தேதி காலை 09.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 15.07.2019ஆம் தேதி இரவு 07.45 மணிக்கு திறந்த நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

14) இவ்வழக்கின் புகார்தாரர் **அ.சா.1**ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், 2019ம் ஆண்டு, மாதம், தேதி நினைவில் இல்லை, ஒரு நாள் மாலை 04.30 மணியளவில் தானும், தனது நண்பர் ப.சா.2 சுந்தரும் கல்லூரி முடித்துவிட்டு பேருந்து ஏறுவதற்காக பேருந்து நிறுத்தம் வந்தபோது அங்கு நிறைய மாணவர்கள் நின்று கொண்டிருந்தார்கள், அவர்களில் தன்னை யார் திட்டி, தாக்கினார்கள் என்று தெரியவில்லை, எதிரிகள் சந்தேகம்படும்படியாக நின்று கொண்டிருந்தபடியால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புகார் மனு கொடுத்துவிட்டேன், புகார் மனுவில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.1** தன்னுடையது தான், அதில் உள்ள விபரங்களை தான் எழுதவில்லை என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியமானது தனது புகார் மனுவிற்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளது. எனவே அ.சா.1ன் புகார் மனு அ.சா.ஆ.2 இந்நீதிமன்றம் நம்பும் வகையில் ஏற்கக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) கண்ணுற்ற சாட்சியான **அ.சா.2** மற்றும் கேள்விநிலை சாட்சியான **அ.சா.3** தங்களது சாட்சியத்தில், சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். புலன் விசாரணை அதிகாரியான **அ.சா.4**ன் சாட்சியம், இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அமைந்துள்ளது.

16) மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அ.சா.1 எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக நம்பும்படியாகவும், கோர்வையாகவும் சாட்சியமளிக்காதது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:13:02 +0530

17) புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் கேள்விநிலை சாட்சியான அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், அ.சா.4ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இல்லாத நிலையில் தனித்து இயங்குகிற உறுதியூட்டம் இல்லாத காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் BNSS பிரிவு 359(ii)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு சமாதானமாகாத குற்றப்பிரிவு என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் இவ்வழக்கினை மேல் நடத்துவதால் அரசு தரப்பிற்கு யாதொரு பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரிகள் தான் அ.சா.1, ப.சா.2ஐ திட்டி, அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) இறுதியாக, 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22) இவ்வழக்கில் வழக்கு சொத்தான பழைய இரும்பு பைப் சி.பி.எண்.76/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றம் வசம் இருந்து வருகிறது. மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:13:09 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:13:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

அட்டவணை

அரசு தரப்பு சாட்சிகள்

அ.சா.1 – திரு. பரத்ராஜ் (புகார்தாரர்)

அ.சா.2 – திரு. அன்புமணி

அ.சா.3 – திரு. ராஜா

அ.சா.4 – திரு. மகாதேவன், உதவி ஆய்வாளர்

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.07.2019 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 13.07.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 13.07.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 13.07.2019 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 13.07.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 13.07.2019 | ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.7 | 13.07.2019 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 13.07.2019 | படிவம் 91 |
| அ.சா.ஆ.9 | 12.07.2019 | பரத்ராஜ் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | 12.07.2019 | சுந்தர் என்பவரின் காயச்சான்று |

அரசு தரப்பு சான்று பொருள் :

அ.சா.பொ.1 – இரும்பு பைப்

எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை

<u>குறிப்பு</u>

1. எதிரிகள் விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.13 18:13:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.